**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.399/2015**
**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : நந்தகோபால் | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : வெங்காய மண்டி வேலை |
| **Village** | : லட்சுமணபுரம் | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : **69/2026** |
| | | **Dated** | : **16.06.2026** |

**16.06.2026**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**<u>சாட்சி மனுவின் பேரில் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரியை எனக்கு எப்படித்தெரியும் என்றால் வெங்காய வியாபாரம் மூலம் 2010 ல் இருந்து தெரியும். எதிரியை அறிமுகப்படுத்தியது யார் என்றால் யாரும் இல்லை. அவராகவே அறிமுகமானார். நான் வெங்காய கடையில் வேலை தான் பார்க்கிறேன் . எனக்கு மாத சம்பளம் எவ்வளவு என்றால் மாதம் ரூ.8,000/– மற்றும் 2 வேளை உணவு மற்றும் இருப்பிடம் கொடுத்துள்ளார். எப்போது இருந்து வேலை செய்கிறேன் என்றால் 1980 ல் இருந்து வேலை செய்கிறேன்.எனக்கு ஆண்டு வருமானம் எவ்வளவு என்றால் ரூ.96,000/– ஆகும். எனக்கு அப்பா அம்மா இருக்கிறார்களா என்றால் இல்லை. 25 – 30 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டனர். நான் பணம் எவ்வளவு கொடுத்தேன் என்றால் ரூ.2,50,000/– கொடுத்தேன். எவ்வாறு கொடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை.

என்னிடம் காட்டப்படும் எ.சா.ஆ.1 வழக்கு நடந்துகொண்டிருந்த போது எனக்கு எதிரி ரூ.1,00,000/— கொடுத்துள்ளதற்கான ஆவணம் என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். எ.சா.ஆ.1 சாட்சி கையொப்பம் செய்த சக்திவடிவேல் எனக்கு எப்படித்தெரியும் என்றால் கடைக்கு வெங்காயம் வாங்க வருவார்.

எதிரி சக்திவடிவேல் பணம் வாங்கியிருந்தார் என்றாலும் அதற்கு ஆதரவாக தான் காசோலை கொடுத்திருக்கிறார் என்றாலும் அந்த பணத்தைத்திருப்பிக்கொடுத்துவிட்டார் என்றாலும் மேற்படி வழக்கு JM—I நீதிமன்றத்தில் CC.172/2016 சமரசமாக முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. பணத்தை எதிரிக்கு எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் கடையில் வைத்துக்கொடுத்தேன். கடை எங்கு உள்ளது என்றால் தாடிக்கொம்பு ரோட்டில் நாயக்கர் புதுப்பேட்டையில் உள்ளது. மேற்சொன்னவிவரத்தை மனுவில் ஏதும் குறிப்பிட்டு கூறியுள்ளேனா என்றால் இல்லை. பணத்தை யாரை வைத்துக்கொடுத்தேன் என்றால் நானும் எதிரிமட்டும் தான் இருந்தோம். வேறு யாரும் இல்லை. பணத்தை எதிரி கேட்ட அன்றே கொடுத்தேனா என்றால் 13.07.2015 அன்று பணத்தை கொடுத்தேன். அதற்கு ஒருவாரம் முன்பு என்னிடம் நேரடியாக அவரே கேட்டார். எதிரி என்ன வேலை செய்கிறார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும் PWDல் அரசு வேலையில் இருக்கிறார் என்று தெரியும். மற்ற விவரம் தெரியாது.

எனது மனுவில் எதிரி தானாக ஓய்வுபெறப்போவதாக கூறிய விவரம் யார் கூறி தெரியும் என்றால் எதிரி என்னிடம் சொல்லித்தெரியும். தானாக ஓய்வுபெற்றால் ஓய்வூதிய தொகை கொடுப்பார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். கடந்த 06.04.2018ம் தேதி ரூ.1,00,000/— நான் பெற்றுக்கொண்டு மீதி ரூ.1,50,000/— தருவதாக பத்திரம் நோட்டரிபப்ளிக் கையெழுத்துப்பெற்றுக்கொடுத்தார் என்றால் சரிதான். தானாக ஓய்வுபெற்றால் ஓய்வூதிய தொகை அதிகமாக வரும் என்றாலும் எதிரி பணம் கொடுக்க தயாராக இருந்தார் என்றாலும் நான் தான் அதை வாங்க மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. ஓய்வூதிய தொகையில் அதிகப்படியான பணத்தை நான் கேட்பதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. தற்போதும் எதிரி மீதி ரூ.1,50,000/— தர தயாராக உள்ளார் என்றால் நானும் தயாராக உள்ளேன். ஆனால் அவர் தயாராக இல்லை.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.06.16 10:52:08 +0530

Judicial Magistrate No.II

Dindigul.